

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

சைவசாஸ்திர பரிபாலனம்

தொகுதி உ	விஷு ஆனிமீ 1941 ஜூன்	பகுதி ௧0

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

சிவபெருமான்

நஞ்சுண்டு கண்டங் கறுத்தமை

நீலகண்டர்

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்ட
மாடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்த
ரீடமாவது விருங்கடற் கரையினி
லெழிறிகழ் மாதோட்டங்
கேடிலாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே.

—திருஞானசம்பந்தசுவாமிகள், திருக்கேதீச்சரம்.

பாடுகின்ற வீணையை யுடையவரும், தமக்கென ஓர் ஒழுக்கமிலராயினும் ஆன்மாக்கட் கருளுமாறு பற்பல ஒழுக்கத்தையுடையவரும், அறனுருவாகிய இடபத்தைச் செலுத்திப்

பஞ்சகிருத்தியமாகிய அரிய நடனத்தை விரும்புகின்றவரும், தேவர்கள் வேண்ட நஞ்சை யுண்டு இருண்ட கண்டத்தை யுடையவருமாகிய சிவபெருமானுக்கு இடமாவது, பெரிய கடற்கரையிற் பொருந்திய அழகுதங்கிய மாதோட்டத்திலுள்ள கேடில்லாத திருக்கேதீச்சரமென்னுந் தலமாம்; அதனைத் தொழுதெழ வருத்தத்தைச் செய்யும் தீவினைகளெல்லாம் கெடுமென்பது இதன் கருத்து. "அமரர்கள் வேண்ட நஞ்சுண்டிருள் கண்டத்தர்" என்பதனாற் குறிப்பித்தருளிய சரித்திரம் கந்தபுராணத்தினாலும் காஞ்சிப்புராணத்தினாலும் உணரத்தக்கன. அச்சரித்திரம் வருமாறு: —

முன்னொருகாலத்தில் அவுணர்களும் தேவர்களும் ஒருவரோடொருவர் எதிர்த்துப் போர் புரிந்தபொழுது இருதிறத்திலும் அநேகர் இறந்தார்கள். அவர்கள் அழியாமலிருந்து போர்செய்யக் கருதிப் பிரமாவை வணங்கி, "அடியேங்கள் இறவாமலிருந்து யுத்தஞ் செய்யும்படி பாற்கடலைக் கடைந்து அதிலுள்ள அமிர்தத்தை எடுத்துத் தந்தருளும்" என்று வேண்டினார்கள். அவர் அதனைக் கேட்டு, விட்டுணுவே இதற்கு வல்லுநர் என்று சொல்லி, அவர்களோடு பாற்சமுத்திரத்தை அடைந்து திருமாலை வணங்கினார். விட்டுணுமூர்த்தி "நீங்கள் வந்த காரணம் என்னை?" என்றார். பிரமா அமரரும் அவுணரும் வேண்டிக்கொண்ட குறையைச் சொல்லினர்.

விட்டுணு அநுக்கிரகார்த்தமாய் "அங்ஙனமாகுக" என்று கூறி மந்தரமலையை மத்தாகவும், சந்திரனைக் கடைதறியாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு, அந்த நாணை ஒருபுறத்தில் தேவர்களும் மற்றொருபுறத்தில் அவுணர்களும் பிடித்திழுக்கும்படி அவர்களுக்குக் கற்பித்து, மத்தின் அடியையும் முடியையும் முறையே தமது முதுகினாலும் கரத்தினாலுந் தாங்கினார். இப்படி மாயோன் மத்தைத் தாங்க, இந்திரனும் அமரர்களும் அவுணராஜனும் அவுணர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது பாற்கடல் வாய்விட்டதிர்த்தது. உலகம் நிலைகுலைந்தது. இவ்வாறாகக் கடையும்பொழுது வாசுகி பொறுக்கலாற்றாது மெய் பதைத்து ஆயிரம் வாய்களோறும் ஆலாகல

விஷத்தைக் கான்றது. அப்பொழுது பாற்கடலும் விஷத்தை உமிழ்ந்தது. அவ் விஷமானது இருண்டு, கொலைத்தொழிலை யும் வாயுவேகத்தையும் பொருந்தி எங்கும் ஓடிப் பரந்து சூழ்ந் தது. அதனைக் கண்டு அவுணரும் தேவரும் ஓடுவாராயினர். விட்டுணு அதனைப் பார்த்துக் கவர்ச்சியுற்று மந்தரமலையைத் தாங்குவதை விடுத்து விஷத்தின் எதிரே சென்றார். அது அவரைத் தாக்கி முன்னுள்ள வைரத்தின நிறத்தை மாற்றி நீலமாக்கிற்று.

விட்டுணு முதலாந் தேவரனைவரும் உற்பத்தி நாசமில்லாத வரும் காலகாலருமாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாசமலையை அடைந்தார்கள். அவர்கள் யாவரும் திருநந்திதேவரைக் கண்டு நிகழ்ந்தவற்றைச் சொன்னார்கள். திருநந்திதேவர், அவுணர் அமரர் என்போரை வாயிலில் வேறு வேறாக நிறுத்தி, பிரமாவையும் விட்டுணுவையும் திக்குப் பாலகர்களையும் அழைத்துக்கொண்டு உள்ளே போய், அவர்க ளுள்ளே திக்குப்பாலகர்களை ஐந்தா மாவரணத்தில் நிறுத்தி விட்டு, பிரமவிட்டுணுக்களைப் பரமபதியின் திவ்விய சந்நிதானத் தில் விடுத்தார் அவர்கள் கிருபாசமுத்திரமாகிய சிவபெருமா னைத் தரிசித்துப் பலமுறை வணங்கி நின்றார்கள்.

முழுமுதற்கடவுளாகிய பரமசிவன் விட்டுணுவை நோக்கி, "உன் மேனி வேற்றுருவாகிய காரணம் என்னை?" என்று வினவியருளினர். விட்டுணு அக் கடவுளை நோக்கி, "அடியேன் இறவாமலிருந்து போர் செய்ய விரும்பி என்னை வந்து வேண் டிய அவுணர்களோடும், தேவர்களோடும் பாற்கடலைக் கடைந் தேன்; அதினின்று ஆலாகலவிஷம் எழுந்து வந்தது. அதனைக் கண்டு அனைவரும் அஞ்சி யோடினார்கள். ஓடாதுநின்ற அடியேனது உடம்பைத் தாக்குதலும் அதற்கு ஆற்றேனாய் அவர்களோடும் இங்கே ஓடிவந்தேன். தேவரீருடைய திருவரு ளைப் பெறுமையால் இத் துன்பம் வந்தெய்தியது. தேவரீர் உமாசகாயராய் இங்கு வீற்றிருந்தருளுதல் அடியேங்களை ஆளு தற்கே யன்றோ? அங்கியைப் போலச் சீற்றத்தோடெழுந்த நஞ்சை மாற்றி எளியேங்களைக் காத்தருள் புரியும்" என்று சொல்லித் துதித்து நின்றார். அப்பொழுது தேவர்களும் தாம்

தாம் முன்னின்ற இடங்களில் நின்று கைலாசபதியைத் துதித்தார்கள். சிவபெருமான் அவ் வோசையைத் திருச்செவிமடுத்து, திருநந்திதேவரை நோக்கியருளி "அவர்களை இங்கே அழைத்து வருதி" என்று கட்டளையிட்டார். திருநந்திதேவர் அனைவரையும் கோயிலுட்புக விடுத்தார். அவர்கள் நின்மலக் கடவுளை வணங்கி, "திவ்விய க்ஷேத்திரமுடையவரே! அடியேங்கள் விஷத்தினல் நொந்தோம்; விரைவில் அருள் புரிக" என்று பிரார்த்தித்தார்கள்.

சிவபிரான் தமது திருமருங்கிற் றொண்டு செய்து நிற்கும் சுந்தரரை நோக்கி, "அந்தக் கொடிய விஷத்தை ஈண்டுக் கொண்டுவருதி" என்று கட்டளையிட்டருளினர். சுந்தரர் வணங்கிச் சென்று, எங்கும் பரந்த விஷத்தைப் பற்றிக் கொண்டுவந்து கொடுத்தார். கடவுள் அதனைத் திருக்கரத்தில் வாங்கி, தேவர்களை நோக்கி, "இந்த விஷத்தை உண்போமா? தூரத்திற் செல்ல எறிவோமா?" என்று வினவியருளினர். அப்பொழுது தேவர்கள் வணங்கி நின்று தேவரீர் திருக்கரத்தில் ஏற்றமையால் இது சிறிது போலக் காட்டிற்று. இக்கொடிய விஷத்தை விடுவீராயின் ஒருவரேனும் பிழைக்கமாட்டார்; அடியேங்கள் உய்யும்படி விரைந்து திருவமுது செய்தருளும்" என்று பிரார்த்தித்தார்கள். அம்பிகைபாகனர் அஞ்சற்க என்று அருள் புரிந்து திருக்கரத்தில் ஏந்திய விடத்தை அமுது செய்தருள அது திருமிடற்றிற் சென்றது. அதனை யாவரும் நோக்கி, "எங்களுயிரைத் தேவரீர் காத்தருளியமைக்குச் சான்றுகத் திருமிடற்றில் நிற்கும்படி அருள் செய்யும்" என்று துதிப்பாராயினர். எம்பெருமான் அவ் விஷத்தைத் தமது திருக்கண்டத்தில் நிறுத்தியருளினர். யாவரும் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். தேவர்களைத் திருக்கைலாசபதி பார்த்தருளி "கடலை இன்னுங் கடையுங்கள்; அமுது எழும்; இப்பொழுதே போங்கள்" என்று அநுமதி செய்தார். அவர்கள் யாவரும் சென்று பாற்கடலைக் கடைந்தார்கள். அதினின்று அமிர்தம் முதலிய பல பொருள்கள் தோன்றின. அவற்றையெல்லாம் தேவர்களே பெற்றனர்கள். விஷத்தைப் பரமசிவன் திருவமுது செய்து தேவர்களுடைய உயிரைப் பாதுகாத்த அருஞ்செயலைத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவாசிவித் தேவாரத்திலே,

“பரிய மாசுணம் கயிறப் பருப்பத மதற்குமத் தாகப்
பெரிய வேலையைக் கலங்கப் பேணிய வான்வர் கடையக்
கரிய நஞ்சது தோன்றக் கலங்கிய வவர்தமைக் கண்டு
வரிய வாரழ தாக்கு மடிகளுக் கிடமா சிவியே.”

என விரித்துக் கூறுகின்றமை காண்க. “அடலரவம் பற்றிக் கடைந்த நஞ்சை யமுதாக வுண்டானை” என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. “ஆலந்தா னமுது செய்தானை” எனச் சுந்தரமூர்த்திநாயனர் கூறியருளினர். “விஷத்தைத் தரித்ததினாலே நீல நிறமான கண்டம் எவருக்குண்டோ அவர் நீலகண்டர் எனப்படுவர்” (நீலக்ரீவ:) என்று தைத்திரீயஸம்ஹிதையும், எவர் தகிக்கும் ஆலாஹலவிஷத்தைக் குடித்தாரோ அந்த ருத்திருக்கு நமஸ்காரம் “[illegible] [illegible]।” என்று சரபோபநிடதமும் செப்புகின்றன.

“பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்” “வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக்—கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே” எனச் சிலப்பதிகாரமும், “மாருப் போர் மணிமிடற் றெண்கையாய்” எனக் கலித்தொகையும் பகர்கின்றன.

சிவபெருமான் நஞ்சைத் திருக்கண்டத்தில் நிறுத்தியருளியது சகல புவனங்களிலுமுள்ள எல்லா ஆன்மாக்களும், பேரிடரை நீக்கும் தமது பெருங்கருணைத்திறத்தை உணர்ந்து உய்யும் பொருட்டாம்.

“புவனங்க ளுய்ய வையர் பொங்குநஞ் சுண்ண யாஞ்செய்
தவநின்று தடுத்த தென்னத் தகைந்ததான் தரித்த தென்று
சிவனெந்தை கண்டந் தன்னைத் திருநீல கண்ட மென்பார்....”

எனத் திருநீலகண்டநாயனர் புராணத்தும்,

“கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே.”

எனப் புறநானூற்றிலும் சிறப்பித்துரைத்தவாற்றானும், "அக் கறுப்பு தான் மறுவாயும் வானோரை உய்யக் கொண்டமையின், வேதத்தைப் பயிலும் அந்தணராற் புகழவும்படும்" என வரும் புறநானூற்று உரையானும் உணரப்படும்.

சிவபெருமான் ஆலாகலத்தை அமுது செய்தருளியது அரிபிரமேந்திராதி தேவர்களெல்லாம் இறவாதிருக்கவேண்டு மென்னும் பெருங்கருணையுடையவர் என்பதை விளக்குவதாம்.

"அடியவரா மிமையவர்தங் கூட்டமுய்ய
வலிகடல்வாய் நஞ்சுண்ட வமுதே........"

—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.

சிவபெருமான் நஞ்சைப் பானஞ் செய்தருளியமை இதர தேவர்களால் நிறைவேற்ற முடியாத அரிய செயல்களை நிறை வேற்றியருளுதலாகிய அப் பெருமானது பேராண்மையைக் குறிப்பதுமாம்.

"சகமெ லாம்பொடி படுத்தெழுந் தழல்விட மிடற்றில்
திகழ வைத்தனன் முப்புர மெரியெழச் சிரித்தோன்
அகல ருந்திறத் தெண்குண நிறைந்தபே ராண்மைப்
பகவன் மேன்மைமற் றெம்மனோ ரளவிடற் பாற்றே"

—காஞ்சிப்புராணம்.

அரிபிரமாதி தேவர்கள் சமஸ்தரும் மரித்தலுடையவர் என்பதும், சிவபெருமான் ஒருவரே மரியாதவர் என்பதும், பார்ப்பதியம்மையார் நித்திய சுமங்கலி என்பதும் இந்த ஆலகால சரித்திரத்தாற் பெறப்பட்ட மற்றோருண்மையாகும்.

"செற்றால முயிரனைத்து முண்டிடவே நிமிர்ந்தெழலுஞ் சிந்தை மேற்கொள்
பற்றாலம் கதுவகர்ந்து நான்முகனே முதலோர்தம் பாவை மார்கள்
பொற்றாலி தனையளித்தோன்........." —கச்சியப்பசிவாசாரியர்.

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும........" —புறநானூறு.

நீல மணிமிடற் றொருவன் போல என்ற கருத்து சாதற் குக் காரணமாகிய நஞ்சுண்டும் நிலைபெற்றிருந்தாற் போல நீயும் சாவாதிருத்தல் வேண்டுமென்பதாம். —ஷை உரை.

"விண்ணேர் அமுதுண்டுஞ் சாவ ரொருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்."

—சிலப்பதிகாரம்.

ஆலாலத் தோற்றமானது சிவபெருமானது திருவருளன்றித் தேவாதியர் தொடங்கிய செயல்கள் முற்றுப்பெறா என்னும் உண்மையையுந் தெருட்டுவதாம்.

அது, சிவஞானசித்தியார் சிவஞானசுவாமிகள் உரையில் "அரன் நினைத்தவாறன்றி ஆகாமை தக்கன் வேள்வி, மார்க்கண்டி வாழ்நாள், ஆலாலத் தோற்றரவு முதலியவற்றால் இனிது விளங்கக்கிடத்தலின்" எனக் கூறியவாற்றான் உணரப்படும்.

தம்மை மதியாது பாற்கடலைக் கடைந்த தேவர்களுடைய குற்றத்தைப் பொறுத்து, அவர் தம்மை அழிக்கவந்த விஷத்தை யுண்டு காத்தமையின் சிவபெருமான் பொறுமையுடையவர் என்பதும் பெறப்படும் சிவபெருமான் பொறுமையுடையவர் என்பது "நமஸ் ஸஹமாநாய" என்பதாதி வேதமந்திரங்களால் உணரப்படும். ஆகவே, பரமசிவன் ஒருவரே முழுமுதற்கடவுளாவார் என்பது இச் சரிதத்தினாலே சித்தித்தவாறு காண்க.

தியானம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அன்பும் சமயமும்

[மாவிட்டபுரம் சிவஸ்ரீ ஸா. குமாரஸ்வாமிக்குருக்கள் அவர்கள்]

சமயமாவது கடவுளை அடைதற்குரிய மார்க்கம். ஆகவே, சைவசமயமாவது சிவபெருமானை அடைதற்குரிய மார்க்கமாம். வேதசிவாகமங்களில் விலக்கப்பட்டனவாகிய பாவங்களை நீக்கி, அவைகளால் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்தல் ஒவ்வொரு சைவசமயியினதும் கடனாகும். நாம் பூர்வஜன்மத்திற் செய்த புண்ணியவசத்தினாலே புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்திலே பல்வகைச் சமயங்களுள்ளும் மேலான சைவசித்தாந்த சமயத்திலே பிறந்திருக்கின்றோம். பெறுதற்கரிய மானுடயாக்கையைப் பெற்றும் சமயநெறி நின்று ஒழுகுதற்குத் தவறுவேமாயின் மாக்களுக்குச் சமானமாவேமன்றோ? நாம் வேதசிவாகமங்களைச் சந்தேகவிபரீதமறக் கற்றிருக்கலாம். ஆயினும், "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா ரெனின்" என்று திருவள்ளுவர் கூறியாங்கு நாம் முழுமுதலாகிய பரம்பொருளை வணங்கத் தவறுவேமாயின் நாம் கற்றதினால் யாது பயன்? சிவபெருமான் இந்த மானிட சரீரத்தை எங்களுக்குத் தந்தருளியது தம்மை மனத்தினாலே சிந்திக்கவும், நாவினாலே துதிக்கவும், தம்மா லதிட்டிக்கப்படும் குரு லிங்க சங்கமம் என்னும் மூவகைத் திருமேனியையும் கண்களினாலே தரிசிக்கவும், கைகளினாலே பூசிக்கவும் கும்பிடவும், தலையினாலே வணங்கவும், கால்களினாலே வலஞ்செய்யவும், தமது பெருமையையும் தமது சிவனடியார் பெருமையையும் காதுகளினாலே கேட்கவுமேயாம். சிவபெருமான் அன்பு வடிவாயிருத்தலினாலும், அன்பின்றேற் சிவபெருமான் இல்லையாதலாலும், நாம் அவருக்குச் செய்யும் துதிகளும் வணக்கங்களும் அன்போடு கூடியவைகளாயிருத்தல்வேண்டும். இதனை,

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலர்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

என்னுந் திருமந்திரத்தாலறியப்படும்.

இனி, அன்பாவது யாதோவெனின், ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய்த் தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் உள்ளநெகிழ்ச்சியாம். பசுக்களாகிய நாம் அநாதியே மலத்தினால் மறைக்கப்பட்டுள்ள அறிவுந் தொழிலும் உடையவர்களாய், தம்வயத்த ரல்லாதவர்களாய் இருக்கின்றோம். அன்புருபராகிய சிவபெருமான் அநாதியே நம்முடன் இரண்டறக் கலந்துநின்று, நமக்கெல்லாம் நித்தியானந்தப் பெருஞ்செல்வத்தைத் தந்தருள விரும்பி, தந்தொழில்களெல்லாம் தம் பயன் சிறிதுங் குறியாது நம் பயன் குறித்த தொழில்களாகவே கொண்டு, பெத்தநிலையிலே தாம் நம்முள்ளே மறைந்துநின்று நமக்குப் பின்னாகியும், முத்திநிலையிலே நம்மைத் தம்முள்ளே யடக்கித் தாம் நமக்கு முன்னாகியும் இப்படியே என்றும் உபகரிக்கும் இயல்புடைய பெருங்கருணைக்கடலாயிருக்கின்றார். ஆதலினால், அவரொருவரே நம்முடன் தொடர்புடையவர். அவரே நமக்கு எம்மினும் இனியவராய் உள்ளவர். அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள். ஆகலின், அவரிடத்திற்றானே நாமெல்லோரும் அன்பு செய்தல்வேண்டும்.

𑌅𑌙𑍍𑌕𑍋𑌲𑌂 𑌨𑌿𑌜𑌬𑍀𑌜𑌸𑌨𑍍𑌤𑌤𑌿𑌰𑌯𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌤𑍋𑌪𑌲𑌂 𑌸𑍂𑌚𑌿𑌕𑌾
𑌸𑌾𑌧𑍍𑌵𑍀 𑌨𑍈𑌜𑌵𑌿𑌭𑍁𑌂 𑌲𑌤𑌾 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌰𑍁𑌹𑌂 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌃 𑌸𑌰𑌿𑌦𑍍𑌵𑌲𑍍𑌲𑌭𑌂
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍀𑌹 𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 𑌪𑌶𑍁𑌪𑌤𑍇𑌃 𑌪𑌾𑌦𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌦𑍍𑌵𑌯𑌂
𑌚𑍇𑌤𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍁𑌪𑍇𑌤𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿𑌸𑌦𑌾𑌸𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇॥

அதாவது, இவ்வுலகத்தில் ஊசி முதலானவைகள் தாமாகவே காந்தம் முதலானவைகளிலே யடைந்து பற்றிக்கொள்ளுவது போல, மனமானது பரமசிவனுடைய திருவடித்தாமரைகளிலே பற்றுள்ளதாயிருப்பதுதான் பக்தியெனப்படும் என்று சங்கராசாரியசுவாமிகள் அன்பு இன்னதென்பதைச் சிவானந்தலஹரியில் விவரிக்கின்றார்.

இம் மனிதசரீரம் பெறுதற்கரிதாதலாலும், இது இக்கணம் இருக்கும், இக்கணம் நீங்கும், இவ்விடத்தழியும் பின் இப்பிறவி யெடுக்கும் என்றறிதற்கரிதாகிய நிலைமையுடையதாதலாலும், நாம் எக்காலத்தும் எவ்விடத்தும் எப் பிறவியினும் பக்தி செய்தல்வேண்டும்.

𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌵𑌾 𑌬𑌹𑌿𑌰𑌪𑌿 𑌵𑌨𑍇 𑌵𑌾𑌦𑍍𑌰𑌿𑌶𑌿𑌖𑌰𑍇
𑌜𑌲𑍇 𑌵𑌾 𑌵𑌹𑍍𑌨𑍌 𑌵𑌾 𑌵𑌸𑌤𑍁 𑌵𑌸𑌤𑍇𑌃 𑌕𑌿𑌂 𑌵𑌦 𑌫𑌲𑌮𑍍 ।
𑌸𑌦𑌾 𑌯𑌸𑍍𑌯𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌮𑌪𑌿 𑌶𑌂𑌭𑍋 𑌤𑌵 𑌪𑌦𑍇
𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌚𑍇𑌦𑍍𑌯𑍋𑌗𑍋𑌽𑌸𑍌 𑌸 𑌚 𑌪𑌰𑌮𑌯𑍋𑌗𑍀 𑌸 𑌚 𑌸𑍁𑌖𑍀 ॥

ஓ ஈசுவரனே! மலைக்குகையிலோ, வெளிப்பிரதேசத்திலோ, வீட்டிலோ, காட்டிலோ, மலையினுச்சியிலோ, நீரிலோ, நெருப்பிலோ, எவ்விடத்திலிருந்தாலும் சரி. எனது மனமானது எப்போதும் உன்னுடைய சரணாரவிந்தத்தில் பக்தியுடையதாயிருக்கட்டும். அப்பொழுதுதான் நான் பரமயோகியாவேன் என்று சங்கரர் சிவபிரானை வேண்டுகின்றார்.

சிவபெருமான் அரூபியாயிருக்கவும், அவரைத் தரிசிக்கப்பெறாத ஆன்மாக்களுக்கு அவர்மீது யாங்ஙனம் அன்பு விளையுமோ எனின், பசுக்களாகிய நாம் நம்முடைய இலக்கணங்களையும், நம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும், சர்வான்மாக்களுக்கும் தலைவராகிய சிவபெருமானது இலக்கணங்களையும் சிந்திக்கவேண்டும். அரிபிரமேந்திராதி தேவர்களுக்கும் கிட்டுதற்கரிய சிவபெருமான் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையோராகிய நமக்கெல்லாம் இரங்கி எளிவந்து ஒபாது உபகரிக்குங் கருணையையும் சிந்திக்கவேண்டும். இத்தகைய சிவபெருமானின் கருணையிற் கோடியில் ஒருபங்குதானும் உரியவர் பிறரொருவர் நமக்கில்லாமையையும் இடையறாது சிந்திக்கச்சிந்திக்க நமக்குச் சிவபிரானிடத்து அன்பு விளையும். இங்ஙனம் அன்பு வளரவளரச் சிவபெருமானை நினைக்குந்தோறும், அவரது திருவிளையாடல்களைக் கேட்குந்தோறும் ஆனந்தபாஷ்பம் சொரியும். உரை தடுமாறும். நாத் தழுதழுக்கும். பக்தியென்னுந் தாயானவள் பக்தனென்னுங் குழந்தையை ஆநந்தக்கண்ணீரால் புளகாங்கிதமாகக் குளிப்பாட்டி, நிர்மலபாவமென்னும் வஸ்திரத்தை யுடுத்தி, வாக்காகிய சங்கத்தினால் சிவபெருமானது சரித்திரமாகிய பாலைப் புகட்டி, உருத்ராக்ஷமாகிய ஆபரணத்தால் அலங்கரித்து, விபூதியாகிய பொட்டிட்டு, சிவபெருமானது தியானமாகிய தொட்டிலிலிட்டுக் காப்பாற்றுகிறாள். இதை,

ஶ்ருத்வா ஶிவநாமகதநாதி வாக்யம் நேத்ரத்வயாத் [illegible]
வாஷ்பாம்பு [illegible] ஸ்வேத [illegible] ரோமாஞ்ச [illegible]
[illegible] ஶிவ [illegible] ஹ்ருதய [illegible]
[illegible] விதிவஶ்யாத் பக்திஜநநீ பக்தாந்ஸ்ரக்ஷதி ||

என்பதால் நன்கு உணரலாம்.

ஆன்மாக்களது அறிவுக்கும் அவர்களது பரிபக்குவங்களுக்கேற்பவும் அன்பு பலதிறப்படும். அது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்குவகைத்து. இவற்றுள் மந்ததரபக்தியாவது அரக்கு வெய்யிலில் வைக்கப்பட்டால் இளகுவதை ஒப்பது. மந்தபக்தியாவது வெய்யிலுக்கு எதிர்ப்படின் இளகும் மெழுகை ஒக்கும். தீவிரபக்தியாவது சூடுபட்டவுடன் நெய்யானது இளகுவதைஒப்பது. தீவிரதரபக்தியாவது என்றும் இடையறாது ஒழுகிக்கொண்டிருக்கும் தைலதாரையை ஒப்பது.

மேலும், அன்பானது மெய்யன்பு, பொய்யன்பு என்றும் தலையன்பு, இடையன்பு, கடையன்பு என்றும் பலதிறத்தாம். இவற்றுள் மெய்யன்பாவது தன்னலங் கருதாது கடவுளருளால் உண்டாகும் பரிசுத்தகுணங்களுள் ஒன்று. இம் மெய்யன்பானது எல்லாப் பிராணிகளிடத்தும் உண்டு. மிருகங்களுட் குரூரமான புலியும் தன் குட்டிகளிடத்தில் அன்பாயிருக்கின்றது. பார்த்தற்கு அச்சத்தைக் கொடுக்கும் விஷம் பொருந்திய நாகமும் தன் குட்டிகளிடத்தில் அன்பாயிருக்கிறது. இங்ஙனமே பக்ஷிகளுள்ளும் மிருகங்களுள்ளும் மனிதர்களுள்ளும் தாய்தந்தையர் தங்கள் குழந்தைகளிடத்தில் அன்பாயிருக்கிறார்கள். அங்ஙனமே குழந்தைகளும் இருக்கிறார்கள். நாம் நாம் நமது தாய்தந்தையரிடத்தில் அன்புடையவர்களாயிருந்தால் நமது பரமபிதாவாகிய சிவபெருமானிடத்தில் எத்துணை அன்புபூண்டிருத்தல் வேண்டும். இத்தகைய அன்பே மெய்யன்பெனப்படும். இதற்கு மாறாகப் பிரதிபலன் கருதிச் செய்வதும், ஆணவத்தினாலுந்தப்பட்டுச் செய்வதுமாகிய அன்பு பொய்யன்பு எனப்படும். ஒருவன் இன்னொருவனிடத்துள்ள பொருளை அபகரித்தற்கு அவனுடன் இதமாய்ப்பேசி நன்மை செய்பவன்போற் பாசாங்குசெய்கிறான். வெளித்தோற்றத்துக்கு அவன் செய்வது அன்புபோல் தோற்றினும் அது உண்மையில் வஞ்சகச்செயலேயாம்.

ஒரு நாயகி தனது நாயகன் இறந்தான் என்ற செய்தி செவியிற் புகுமுன்னரே உயிர்துறப்பாளாயின் அவளது அன்பு தலையன்பு எனப்படும். இதற்குக் கந்தபுராணத்திலே சூரபன்மன் இறந்தான் என்ற செய்தி கேட்டமாத்திரத்திற்றானே அவன்மனைவி பதுமகோமளை உயிர்துறந்தாள் என்றதே போதிய சான்றாகும். நித்தியமும் கொலைத்தொழிலே புரிந்துவந்தவரான கண்ணப்பர் இறைவனைக் கண்டமாத்திரத்தே அன்புருவாயினாரன்றோ! சிவபெருமான் தமது கண்ணிலிருந்து நீர்வடியும்படி செய்தது தன்னடியாரின் பக்தியைச் சோதிப்பதற்காகவேயாம். கண்ணப்பரும் ஊனுக்கு ஊனிடுதலே தகுதியென்று நினைத்து தமக்கு நேரும் வருத்தத்தையும் துடிதுடிப்பையுஞ் சிறிதும் எண்ணாது தமது கண்ணைக் கல்லி எடுத்து சிவபிரானது கண்ணுக்கு ஈடுகொடுத்தார். இத்தகைய அன்பன்றோ தலையன்பாகும். ஒரு நாயகி தனது நாயகன் இறந்ததைக் கேட்டுத் துக்கிக்கிறாள். தனது நாயகனுடன் இறந்தால் சுவர்க்கம் கிடைக்குமென்று எண்ணுகிறாள். அல்லது இவ்வுலகத்திலே தனக்குக் கீர்த்தியுண்டாகும் என்று நினைக்கிறாள். அன்றேற் கணவனிறந்த பின்னர் உயிர்வாழின் உலகத்தார் தூற்றுவர் என்று அஞ்சுகின்றாள். இங்ஙனம் சிலகாரணங்களைக்கொண்டு அந்நாயகி தன் கணவனுடன் சககமனஞ்செய்தல் இடையன்பாகும். மேற்கூறப்பட்ட தலையன்பு இடையன்பு என்னும் இரண்டுமல்லாதது கடையன்பாகும். இங்ஙனம் நாயகி நாயகனது பெயர் கேட்டளவில் வசமழிதல் தலையன்பும், அவனைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவனைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். அவ்வாறே பக்குவமடைந்த ஆன்மாவும் ஆன்மநாயகருடைய பெயர் கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவரைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவரைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். நாயகனது பெயர் கேட்டுழி வசமழியும் நாயகிக்கு, அது கேட்டலோடு காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி முறுகி வளரும் அன்பின் பெருக்கம் இத்துணைத்தென்று கூறுதல் கூடாது. அதுபோலவே ஆன்மநாயகருடைய திருநாமத்தைக் கேட்டபோது வசமழியும் ஒருவற்கு அவரைக் காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி முறுகிவளர்ந்த தீவிரமாகிய அன்பின் பெருக்கத்தை இத்துணைத்தென்று கூறுதல் கூடுமோ!

கோல நீடிய சிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை யிந்திர னரசினைக் கனவினும் வெஃகேன்
மாலை யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்.

என்று வீரவாகுதேவர் சுப்பிரமணியப்பெருமானிடம் வேண்டுதல்செய்வது அத்துவிதநிலையை விளக்குகின்றது. இதுவே தீவிரதரமாகிய தலையன்பு. இத்தகைய உண்மையான தலை அன்பு கருமயாகம், தவயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம் முதலியவற்றுற் கிட்டாது. சிவபெருமான் பக்தியாகஞ் செய்வோருக்கே வசப்படுவர்.

கருமமா தவஞ் செபஞ்சொல் காசறு மாதி ஞானம்
புரிபவர் வசம தாகிப் பொருந்திடேம் புரையொன் றின்றித்
திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்போ
முரைசெய்வோ மவர்மு னெய்தி யவருளத் துறைவோ மென்றும்.

—வாயுசங்கிதை.

மேலே சொல்லப்பட்ட அன்பு, அனேக இலக்கண இலக்கியங்களைச் சந்தேகவிபரீதமறத் தெளிந்தமையினாலே கிட்டக்கூடியதன்று. வேதசிவாகமங்களிலே போந்த பதி பசு பாச இலக்கணங்களை வாசித்துக் கற்றறிந்துகொண்டோம் என்னும் அகங்காரத்துக்கும், அளவுகடந்த வித்வசாமர்த்தியத்துக்கும், குசாக்ரமதிநுட்பத்துக்கும் அணுத்துணையேனும் எட்டாது. ஆனால் அநந்தகோடி முற்செனனங்களிலே செய்து ஈட்டிய தவத்தினாலும் திருவருளினாலுமே கிட்டும்.

அன்பு சைவசமயத்துக்கு மிகவும் இன்றியமையாததென மேலே கூறப்பட்டது. அன்புள்ளவன் வேதசிவாகமங்களில் விலக்கப்பட்டவற்றைச் செய்யத்துணியமாட்டான். சைவநூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்தற்கு அன்பு அவசியம் வேண்டும். அன்பில்லாவிடத்து வருணாச்சிரம தருமங்கள் தழைத்தோங்கா.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனு மது."

என்றாங்கு அன்பில்லாவிடத்து இல்வாழ்க்கை பயனற்றதாகும். மிகவும் சிறந்த தருமமாகிய விருந்தினரை உபசரித்தலுக்கும் அன்புவேண்டும். அன்பில்லாதவர்கள் இடும் உணவு வேம்புக்குச் சமானமாம். இதனை,

விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருணை வேம்பாம்—விருப்புடைத்
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
யென்போ டியைந்த வமிழ்து.

என்னும் நாலடியார்ச் செய்யுளானு முணரலாம்.

மேலும், "சைவம்" என்னும் சொல் தற்போது கொல்லாமையையும் புலாலுண்ணாமையையுங் குறித்து நிற்கின்றதன்றோ! அன்புடையானொருவன் தனது ஊனைப்பெருக்குவதற்கு ஒருபோதும் உயிர்க்கொலைசெய்ய மனம் ஒருப்படான். பிறரை வருத்தவும் துணியான். தவவொழுக்கத்துக்கும் விரதானுஷ்டானங்களுக்கும் அன்பு அவசியம் வேண்டும். "நோன்பென்பது கொன்று தின்னாமை" என்று ஔவையார் அருளியவாறும்,

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்."

என்று திருவள்ளுவர் கூறியவாறும் காண்க. தவத்துக்குக் கொல்லாமையே மேலானதவம்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்." என்றார் நாயனாரும்.

இதுகாறும் கூறிப்போந்தவற்றால் அன்பே சிவத்துடன் இரண்டற அபேதமாய் நிற்குமென்பதும், அது நமது பூர்வ புண்ணியங்களினாலே ஆன்மாக்களாகிய நமக்குக் கிட்டுமென்பதும், தவம் யாகம் முதலியவற்றிற்கு வசப்படாத சிவபெருமான் அன்பின் வசப்படுவரென்பதும், பசுக்களாகிய நாம் நமது மலத்தை நீக்குதற்கு அவர்மீது பக்தியுடையவர்களாயிருத்தல் வேண்டுமென்பதும், அன்புடைமைக்கு அடையாளங்களிவையென்பதும், அன்பு இத்தனை வகைப்படுமென்பதும், சைவசமயத்துக்கு அன்பு இன்றியமையாததென்பதும், வேதசிவாகமங்களிலே கூறப்பட்ட சிவபுண்ணியங்களைச் செய்தற்கு அன்பு அடிப்படையாக உள்ளதென்பதும், தீவிரதரமாகிய அன்பின் முதிர்ச்சியிலேயே ஆன்மநாயகராகிய சிவபெருமான் விளங்குவரென்பதும் பெறப்பட்டன. ஆகலின், சைவசமயிகளாகிய நாங்கள் வேதவழிநின்று, சிவபெருமானிடத்து உறுதியான அன்பு பூண்டு, அவரது திருவடித்தாமரைகளை அடையமுயலுவோமாக. சுபம்.

ஸ்திரீகளின் தருமமும், கற்பும்

[A. V. சகுந்தலாபாய் எழுதியது-]

ஸ்திரீகளுக்குக் கற்பே மிக முக்கியமானது. ஸ்திரீகளுக்குக் கணவனைத் தவிரக் கடவுள் வேறு கிடையாது. அதையே வடமொழியில்,

பதிரேவ பந்து: ஸ்த்ரீணாம் தைவதேதி நிகத்யதே ।

என்று கூறக் காண்கிறோம். ஸ்திரீகள் காலையில் எழுந்தவுடன் கணவனைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்த பிறகே மற்றக் காரியங்களைச் செய்யவேண்டும். அதை நமது தெய்வப்புலவர்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

என்று கூறியுள்ளார். தன் கணவனுக்கு வருகின்ற வருவாயைக் கொண்டு அதற்குத் தகுந்தபடி செலவுசெய்வது பெண்களது கடமை. அத்தகைய மனைவியை யுடையவனது வாழ்க்கையே நல்வாழ்க்கை.

கிருகஸ்தனுடைய இல்வாழ்க்கை யாவும் இல்லாளைக் கொண்டே நடக்கவேண்டும். ஆகையால், இல்லாளிடம் நற்குண நற்செய்கைகள் இல்லாவிடில் இல்லறதர்மம் ஒழுங்காக நடைபெறாது. இவை யாவும் கருதியே நமது புலவர்,

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினும் இல்.

எனக் கூறியருளினர்.

கணவனை வணங்குதல், கணவனுக்குச் சுச்ருஷை செய்தல், கணவனுக்கு உபசாரஞ்செய்தல், கணவனுடைய கருத்தை அறிந்து அதற்கேற்பச் செய்தல், மற்றும் கணவனுக்குரிய பணிகள் எவையோ அவற்றைச் செய்தலே மகளிர்களுடைய சிறந்த கருமமாகும். ஒரு பெண்ணிடத்தில் ஏனைய தர்மங்கள் நிறைந்திருந்தும் கற்பு என்னும் பாதிவிருத்யம் இல்லையெனின் அவை விழலுக்கிறைத்த நீராகும். வடமொழியில் பதிவிரதை என்கிற பதத்திற்குக் கணவனிடத்தில் விரதத்தை யுடையவள் எனப் பொருள்படும். கடவுளிடத்தில் பக்தியுடன் எப்பொழுதும் சுசியாகக் கடவுளையே நினைத்துக்கொண்டு, உபவாசம் இருப்பது புருஷர்களுக்கு விரதம். கணவனையே கடவுளாக

எண்ணிக் கணவனையே தியானஞ்செய்துகொண்டு அன்னிய புருஷர்களை மனதிலும் நினையாமல் இருப்பதே ஸ்திரிகளுக்கு விரதம். இதைக் கருதியே பதிவிரதை என்ற சப்தம் உண்டாயிற்று. உலகத்தில் ஒருவனுக்குக் கற்புடைய மங்கைபொருத்தி கிடைப்பாளேயாகில் அதனினும் சிறந்தது வேறொன்றுமில்லை என்னும் பொருள்பட,

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மை உண்டாகப் பெறின்.

எனத் தமிழ்வேதங் கூறுகிறது.

தற்காலத்தில் நாகரிகம் உயரஉயரக் கற்பு மிகத் தாழ்வடைகிறது. நம் நாட்டுச் சிறுமிகள் மேல்நாட்டுப் பெண்களைப் போல நடக்கவேண்டுமென்று ஆங்கிலக்கல்லூரிகளிற் சேர்ந்து வாசித்து, அன்னியபுருஷர்கள் என்ற வித்தியாசத்தை விட்டு, அவர்களிடம் கைகுலுக்குவதும், மற்றைய ஆங்கிலருக்குரிய செய்கைகளையும் செய்துகொண்டுவருவதுமாயிருக்கிறார்கள். அத்தகைய செய்கைகளைப் பார்த்து, அவர்களின் தாய் தந்தையர்கள் அதை உத்கிருஷ்டமென எண்ணி மனமகிழ்ச்சியையும் அடைகிறார்கள். அந்தோ! இதற்கு நாம் என்ன செய்வது?

எப்பொழுதும் தாழ்ந்தநிலையுடையவர்கள் உயர்ந்தவர்களைப் போல இருப்பதற்கு இச்சிப்பது இயல்பு. இப்பொழுது அதற்கு மாறுபாடாக இருப்பதற்குக் காரணம் கலியோ என்றுதான் நாம் எண்ணுறவேண்டும். ஆங்கிலம் படிப்பதைக் குற்றமாகச் சொல்லவில்லை. ஆங்கிலேயர்களைப் போல நடப்பதுதான் இகத்தில் கேட்டையும் பரத்தில் நரகத்தையும் தருமாகையால் குற்றமெனச் சொல்ல முன்வந்தோம். தவிர ஆங்கிலநூல்களில் இந்தியஸ்திரிகளுடைய தர்மம் இராதாகையால் ஆங்கிலம் படிப்பதாற் பிரயோஜனமில்லை.

ஆகவே, ஸ்திரிகள் ஸ்திரிதர்மங்கள் அடங்கிய தமிழ்நூலையும் வடமொழிநூல்களையுமே வாசிப்பது மிகச் சிறந்ததாகும்.

பெரியோர்களே! இனி உங்களது பெண்களை ஆங்கிலம் படிக்க விடாதீர்கள். படித்தவர்களை நல்ல வழியில் நடக்கச் செய்யுங்கள். நல்ல புத்தியைத் தரும் தமிழ்நூல்களைப் புகட்டுங்கள். சுபம்! சுபம்! சுபம்!

மங்கையர்க்கரசியார்

[திருமயிலை, சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் எழுதியது.]

மங்கையர்க்குத் தனியரசியாக விளங்கிய இவ்வம்மையார் மானியார் என்று திருத்தொண்டத்தொகையிலும், சம்பந்தர் தேவாரத்திலும், திருத்தொண்டர் திருவந்தாதியிலும் குறிப் பிடப்படுகின்றார். இப்மாதுசிரோமணியின் சைவப்பற்று அளவு கடந்தது. திருநீற்றி னொளிதழைக்கச்செய்தார் இவரன்றோ? திருநீற்றுப்பதிகம் இவர் நாயகர்பொருட்டன்றோ சம்பந்தப் பெருந்தகையாரால் அருளிச்செய்யப்பட்டது? இவர்களுடைய சைவத் தொண்டைத் திருஞானசம்பந்தரே தம்முடைய தேவா ரத்திற் பல இடங்களிற் சிறப்பித்துக் கூறுகின்றாரென்றால் அதன் தன்மையை யாம் என்னென்று இயம்புவது? இப்பெரு மாட்டியின் சிவவேடப் பொலிவைப் பின்வரும் தேவார அடிகளிற் கூறியிருக்கும் அழகு படித்தின்புறத்தக்கது:—

"முத்தின் தாழ் வடமுஞ் சந்தனக் குழம்பும் நீறுந்தன் மார்பினில் முயங்கப்—பத்தியார்கின்ற பாண்டிமாதேவி"

சிவஞானக்கன்றாகிய சம்பந்தர் பெருமையைக் கேள்விப் பட்டதும் தமது நாட்டிலுள்ள புறச்சமயக் காட்டைக்களைந்து சைவப்பயிரை வளர்க்கத்தக்கவர் அவரேயென்று அம்மையார் கருதினர். இதனால் சைவ சிகாமணியாரிடத்தே அவர்களுக்குப் பேரன்பு உளதாயிற்று. இவ்வன்பு தலையன்பாம்.

சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்ல—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு.

என்னுந் திருக்களிற்றுப்படியார் வெண்பாவால் அறிக. நால்வர் நான்மணிமாலையிலும் பின்வரும் வெண்பாவில் அம்மை யாரின் தலைசிறந்த அன்பைச் சிவப்பிரகாசர் விசித்திரமாக விளக்கியுள்ளார்.

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்த
இங்குயர்ந்தா ளார்சொல் எனக்கு.

அன்னை - உமாதேவியார். கோமகள் - மங்கையர்க்கரசி யார். உமாதேவியாரினும் மங்கையர்க்கரசியார் உயர்ந்தவர் என்று கற்பித்தபடி.

சீதையின் ஜனன ரகசியம்
கற்பின் மகிமை

[மண்டி, வேலூர் ஸ்ரீமான் லோ. து. நடராசசெட்டியார் அவர்கள்]

சீதை சிவபக்தித் தசரதற்கு மகனாகிய ராமருடைய தர்ம பத்தினி. சிவபக்தனான இராவணனுக்குப் பிறந்து, சகலகலா பிரவீணனான சனகனால் வளர்க்கப்பட்டு, சானகி என்னும் பெயரால் சிறந்தாள். அருந்ததியனையாள். அமுதினும் இனியாள். இவள் முற்பிறப்பின் வரலாறு பின்வருமாறு:—

முன்னர் பிரகஸ்பதி புத்திரனான குசத்துவசர் தவத்தில் உதித்த வேதவதி என்னும் பெண், திருமாலினை விவாகஞ் செய்யவேண்டுமென்று நினைத்துத் தவஞ்செய்தாள். திக்கு விஜயஞ்செய்ய அவ்வழி வந்த இராவணன் அவளைக் கண்டு மோகித்துக் கற்பழிக்கத் தொடங்கினன். வேதவதி வருந்தி நினக்கே மகளாகப் பிறந்து உன்னையும் உன் ஊரையுந் துணை சுற்றங்களையும், படைகளையும் அழிப்பிக்கின்றேன் என்று அக்கினியில் விழ்ந்து, பின் மண்டோதரி வயிற்றில் வந்து பிறந்தாள். அவன சோதிடர்களை வருவித்துப் பலன் கேட்க, அவர் இக் குழந்தை இங்குளதேல் இலங்கை முற்றும் நாசமாகும் என்று சொல்ல, குழந்தையைக் கடலில் எறியும்படி இராவணன் உத்தரவிட மண்டோதரி ஓர் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிட்டு மனம் வருந்தி அழுது கொடுத்தாள். அது கடலில் எறிபப்பட்டு மிதிலைக்கரையிற் சேர்ந்து மணலான் மூடப்பட்டுக் கிடந்தது. சிவபக்தியிற் சிறந்த சனகன், புத்திரப்பேறின்மையால் வருந்தி, புத்திரகாமேட்டியாகஞ் செய்தற்காக யாகசாலையைப் படைச்சால் கொண்டு உழுவித்தான். கலப்பைச்சால் வழியாகப் பெட்டி காணப்படத் திறந்து பெண்ணுயிருத்தல் கண்டு வளர்த்தான். கலப்பைச்சாலிற் கண்டெடுத்தமையாற் சீதை என்று பெயரிட்டு வளர்த்து, இராமருக்குத் திருமணம் செய்துகொடுத்தான். சீதை பிறக்க இலங்கை யழிய என்று முதுமொழிக்கிணங்க, பின்னர் இவள் இராவணனால் அபகரிக்கப்பட்டு அவன் தன் இனத்தோடு மாண்டுபோவதற்கும் இலங்கை அழிவதற்கும் காரணமானாள். தேவர்களும் மக்களும் இதம் பெறலாயினர். கற்பின் திறத்தை நிலைநிறுத்தினள்.

பத்திரிகா வாஞ்சைமொழி

[திருக்கோடிமாடச்செங்குன்றூர்

பண்டித ஸ்ரீ தி. நா. அர்த்தநாரீஸ்வரக்குருக்கள் அவர்கள்.]

அதிமேன்மைதங்கிய நம் இந்தியநாட்டின் பல சாதனங்களுள் முக்கிய அங்கமாயும், பொதுஜனநன்மைக்குழைத்து மிகு சுகமளிக்க வல்ல கற்பகதருவாயும், காசாசையென்னும் பைசாசவலையிற் சிக்கி விக்கிப் பெருங்கேடு புரிவதே அருந்தொழிலெனக் கொண்டு, அநாதைகளையெல்லாம் அடிவயிற்றில் அடித்து வருத்தித் துடிக்கச் செய்துவரும் பல உத்தியோகத் துஷ்டமக்களைக் கண்டிக்கத்தக்க வீரசூர வேலாயுதமாயும், நாஸ்திகவாதமே புரிந்து, ஆஸ்திகளையெல்லாந் துறந்து வாஸ்தவ வஸ்துவை மறந்து, காந்திபத்தைப் பரிந்து பேசிப் பரிதபிப்போரின் வாயைப் பூட்டியாட்டப்போந்த சூத்திரதாரியாயும், அஞ்ஞான இருளை யகற்றி, மெய்ஞ்ஞானப்பொருளைப் புகட்டும் தீபமாயுமிலங்கின்ற நம் "சைவசாஸ்திர பரிபாலனம்" போன்ற சுயபாஷா பத்திரிகைகளை நயமாய் நடத்தி நற்பெயர் பெறுதல் கஷ்டசாத்திய விஷயமென்றே யாவரும் அறிவர். நமது நாட்டிலுள்ள சீமான்கள் பத்திரிகாரத்தினங்களைப் பத்தியுடன் எடுத்துப் பாதுகாக்குந் தன்மையுடையரேயல்லர். அன்னோர் சுதந்தரித்துள்ள அருந்தனமெல்லாம் அநியாயவகையில் அழிவதே வழக்கமாயுள்ளது. ஆங்காங்குள்ள பத்திரிகாநேயர்களும் அவைகளை யாதரிக்க விபலாத தாரித்திரியதசையையடைந்து அனலிடு மெழுகுபோல் அநவரதமும் கரைந்துருகினவண்ணமாயிருக்கின்றனர். பத்திரிகாரக்ஷகராயமையும் கையொப்ப கனதனவான்களாலேனும் சிறிது நன்மையுண்டோ எனச் சிர்தூக்கின் அந்தவிதத்திலும் அபாவமான முடிபே மிகுதியும் ஏற்படக்கூடியதாயிருக்கின்றது.

பெரும்பாலார் பத்திரிகையினிடத்தே தமது கௌரவப் பிரபுத்துவத்தைக் காட்டவேண்டுமெனக் கங்கணம் பூண்டு, அவைகளை யன்பா பெடுத்துக் கையாடி உரையாடி அமிர்தரசத் தேனையுண்டு களிப்பதை யொழித்து அதற்கேறுமாறாக, வலுவில் வந்த வந்த சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளுவதுபோலத் திரிகிறார்கள். "ஶிவேந ஸ்தாபிதம் ஶைவம் ஶைவேந ஸ்தாபிதம் ஶிவம்" என்றபடி சிவபெருமானோடு வியா

பித்த சைவசாஸ்திர பரிபாலன பத்திரிகாரத்தினத்தைப் புறந் தள்ளி நிந்திப்பதும் ஆனந்திப்பதுமுண்டு. ஆகவே, பத்திரிகா விசுவாசப்பட்டிராத மற்றும் பல கோடி பிரபுக்களைக் குறித் துக் குறைகூறுவது அநாவசியகமாகும். இங்கிலாந்து தேசம் நமது இந்தியாவை விட எத்தனையோ மடங்கு சிறிதென்பதை நாம் எடுத்துரைக்கவேண்டியதில்லை. அத்தேச ஜனத்தொகை யும் அதிஅற்பந்தான். இவ்விஷயத்தில் பின்னடைந்திருக்கிற அத் தேசத்தின் கல்வியும் சிரும் நாகரீகமும், புகழுமோ புகழ்தற்பாலதன்று. அத் தேசம் சிரடைந்து பிரகாசிப்பதற் குக் காரணம் பத்திரிகைகளே. ஆயினும், அதுவும் இக் காலத்து நிலைமாறித் தடுமாறுகிறது. அங்ஙனமாயினும், ஆங்காங்குப் பத்திரிகைகளை அபிமானித்துப் போற்றுவோர் பலருளர். ஆறணுக் கூலியாள் முதல் அறுபதினுபிரம் பொன் படைத்த செல்வர் கடையாக அனைவரும் பத்திரிகை வாங்கிப் படிக்கின்றனர். அன்றியும், பத்திரிகைகளைப் பிரீதியாய் வரவழைத்துப் பார்த்து அவைகளிலுள்ள விஷயங்களை ஐயந்திரி பற ஆராய்ந்துணர்ந்து தத்தம் அபிப்பிராயங்களைத் தாட்டீக மாய் வெளிப்படுத்திவரும் அறிவாளிகளும் அநேகருண்டு. நாளுவிஷயங்களும் நன்கறிந்து பத்திரிகை நடத்திவரும் பரோ பகாரகுணங்கொண்டு, புத்தி யுத்தியிற் சிறந்துள்ள பெண்கள் நாயகமும் சிலர் இருக்கின்றனர். இவ்விதம் சிறியோர் பெரி யோர், செல்வர், வறியர், கற்றோர், மற்றோராகிய ஆண்பெண் அடங்கலும் பத்திரிகைகளைப் பிராணநிலையாய்ப் பாவித்துப் பரிபாலித்துவருவதால் பெரும் புகழடையக் காரணமாகின்றது. பத்திரிகைகளைப் படித்தல் தங்கள் தங்கள் நித்தியகருமங்க ளுள் ஒன்றெனமதித்துச் சீராய் நிறைவேற்றுகின்றனர் சிலர். ஆங்குத் தோன்றும் பத்திரிகைகளுள் வறுமையால் வாடி மறைவன கிடையா. அங்ஙனம் அநாதரவுநோய்க்குட்பட்டு அழிந்துபோகும் பத்திரிகைகளைப் பார்க்கவும் சகியார்கள். ஆதலினாலன்றோ அத் தேயத்தார் ஐக்கியம், அறிவு, உண்மை அபிமானம் முதலிய அனந்தகுணங்களையும் ஒருங்கே பூண்டு உலகில் ஒப்பற்ற புகழடைந்து முன்வந்தார்கள். ஆனால், நம் நாட்டிலோ எனின் பத்திரிகை படிப்பவர் சிலரே. பத்திரிகாபி மானம் சூனியமே. அவைகளைப் பிரீதியாய் வாங்கிப் படித்து

ஆதரிப்போர் அற்பத்திலும் சொற்பந்தான். பத்திரிகை வரவழைத்துப் படித்துவிடின் பொருளெல்லாம் இழந்து, பிச்சைக்குப் புறப்படவேண்டுமென்பது சிலரின் அபிமதம். ஆனால், இன்று மனை; நாளைப் பிணம் என்று நமது அற்ப வாழ்வையே சதமென்று நினைத்து, நீடூழிகாலம் நிற்கும் உயர்தரப் புகழைக் கைசோரவிட்டு, முயற்சியுடையாரை இகழ்ந்து பேச மிகப் பலருண்டு. மற்றும் சிலர் "கடவுளும் கோயிலும் கண்ணெதிராயினும் பாரோம்; ஏனப்பா, என் ஆஸ்திக்கு நீ அழிவாய்ப் பிறந்தாயோ? போதும் போதும். உன் புத்தியைக் கேட்டால் நான் பிழைத்துப்போவேன் போ" என்கிறார்கள்.

இலவசமாய்ப் பத்திரிகையைக் கொடுத்துப் படிக்கச்சொன்னாலும், இன்று இலவசமாய்க் கொடுத்துப் படிக்கவைத்து அறிவையூட்டி அப்புறம் மாதம்மாதம் வெள்ளிப் பணத் துண்டுகளைக் கொள்ளையடித்துப் போகப்பார்க்கின்றாயோ? இது களர்நிலம்; நீர்போடும் ஆணிமுத்து முளையாது; இம்மிளகுக்கொடி இவ்வந்தகாரக் காம்பைக்காட்டில் தளிர் விடாது என்று ஆலோசித்து, கூடியவரை ஒருகை பார்க்கட்டும்; நாம் காகிதத்தைப் பார்ப்போமா? என்று வைராக்கியம் சாதித்துப் பின்னர் சந்தைபிரைச்சலில் குடியிருந்து கெட்டேனே என்று ஓட்டம் பிடிக்கிறார்கள். ஒருவேளை பத்திரிகாபிமானிகளின் பிடிவாதத்துக்குட்பட்டு, பத்திரிகை வரவழைத்தாலும் அதனை அன்பாய்ப் படித்து மகிழ்வதுமில்லை; சந்தாத்தொகையினைச் சரிவரச் செலுத்தி ஆதரிப்பதுமில்லை.

மேலும், சிலர் கௌரவத்துக்காகப் பத்திரிகை தருவித்து ஓர் பகுதிகூடப் பாராமல் மூலையில் எறிந்துவிட்டுப் பணம் செலுத்த வற்புறுத்திக் கேட்குங்கால் இது என்ன தொந்தரவு? என்று எரிந்து விழுந்து சீறி, பேப்பரில் விநோத விஷயங்கள் பிரசுரமாவதில்லை; மதசம்பந்த வைதிக விஷயங்கள் பிரசுரமாவதில்லை; இலக்கண நடை அலக்கணுயிருக்கிறது; செந்தமிழாயில்லை; படிக்கப் பொழுதில்லை; தமிழ்ப்பாஷையினைத் தப்பிப் படிப்பதில்லை; தலை கிறுகிறுக்கிறது; என்றெல்லாம் செப்பிக் கழித்துவிடுகின்றனர். இன்னனம் கைபொப்ப நேயர்களுடைய ஆதரவின்மையெனும் அதிசாரநோயால் அழிந்து மறைந்து

போன பத்திரிகைகள் பல உண்டு. இதற்கு உதாரணமாக நாம் ஊடாடி உறவாடிக் கண்டு களித்துவந்த நமது சைவம், நீலலோசனி, பழங்காலத்துச் சைவபரிபாலனம், கலாவல்லி, சமயஞானம், விவேகதிவாகரன் என்னும் பத்திரிகைகளின் அநித்திய நிலைமையைக் குறிப்பிடலே சால அமையும்.

ஆகலின், இந்த நிராதார நிலையில் நமதருமையிற் சிறந்த சுயசமய பாஷாபத்திரிகைகள் என்னும் பாலர்கள் பாலமுதூட்டுவார் யாருமற்று, பாலாரிஷ்ட முதலிய நோயுற்று, பலங்குன்றத் தம்மைத் தாலாட்டிச் சீராட்டி நிர்வகிக்கவந்த பரோபகாரிளுக்கேனும், பிறருக்கேனும் எவ்வித நன்மையுமின்றி பண்ணுது ஒழிவதைக் கண்ணுரக் கண்டுமுள்ளோம்.

பத்திரிகைகள் அழிந்துபோகும்வரை நம்மவர் சுகஜீவிகளாய் இருத்தல்கூடாது. இது நம் சைவர்களுக்கும், ஆதிசைவசிகாமணிகளுக்கும் அழகன்று. இனியேனும் நம் சைவசாஸ்திரபரிபாலனம், சிவநேசன், சிவாசபவித்தியா போன்ற சுயமதபாஷா பத்திரிகைகளை அபிவிருத்திசெய்ய முன் வருவார்களாக.

ஓர் வேண்டுகோள்

[திருக்கழுக்குன்றம்
சிவஸ்ரீ மாணிக்கவாசகத்துரக்கள் அவர்கள் எழுதியது.]

பிரமானந்தத்தைத் தரக்கூடிய இந்தச் சைவசாஸ்திர பரிபாலனப் பத்திரிகையைப் ஆனந்திக்கும் சிவாசாரியஸ்வாமிகள் சன்னிதியில் சிறியேனுடைய எனது விஞ்ஞாபனம்.

நடந்த விக்கிரமவருஷம் மாசிமாதத்துச் சைவசாஸ்திரபரிபாலன வெளியீட்டில் 139, 140-ம் பக்கங்களில் தமிழ்மறையும் ஆசிர்வாதமும் என்று ஸ்ரீலஸ்ரீ விருத்தகிரிசிவாசாரியர் அவர்கள் எழுதியிருக்கும் விஷயத்தை எல்லோரும் கவனித்திருக்கலாம். அவர் மூன்று பாராவில் அருமையான சில விஷயங்களை எழுதியிருக்கிறார். பொருத்தமற்ற நான்காவது பாராவில் தான் ஏகாந்தத்தில் ஆனந்தத்தை அநுபவிக்கக்கூடிய அவர் கருத்தையும், காரணுகமத்தில் உள்ள பிரமாண சுலோகங்களையும் எழுதியிருக்கிறார். அதைப் பார்த்துச் சில சிவாசாரியர்களின் மனம் கொதிப்படைந்திருக்குமென எண்ணுகிறேன்.

சாமான்யமாக விஷயங்களை நிச்சயிக்கப் பிரமாணங்கள் அவசியமானவைகள் தான். அவை பிரத்தியக்ஷம், அனுமானம், சாப்தம் என மூவகைப்படும்.

இந்திரியங்களுக்கு நேரில் தெரிக்கூடியவைகளைப் பிரத்தியக்ஷத்தாலும், பிரத்தியக்ஷத்தில் புலப்படக்கூடாத விஷயங்களை அனுமானத்தாலும், அனுமானத்தால் புலப்படக்கூடாத விஷயத்தைச் சாப்தமான சாஸ்திரப் பிரமாணத்தாலும் நிச்சயிக்க முறையிருக்கிறது. இதைக் கவனியாது நமது சிவாசார்யஸ்வாமிகள் பிரத்தியக்ஷப் பிரமாணஸித்தமான விஷயத்தில் சாஸ்திரப் பிரமாணம் காட்டியது பொருந்தாது. நம் முன்னோர்களால் எல்லாச் சிவாலயங்களிலும் நித்தியநைமித்திய காலங்களில் புராதன வழக்கமாக நாளதுவரையிலும் நடந்துகொண்டிருக்கும் ஆசீர்வாதம் ஆனபிறகு தேவாரம் என்ற கிரமம் எல்லோரும் தெரிந்த விஷயமே. இவ்விதமாகவே எல்லா இடங்களிலும் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. இதுவும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

இது இப்படியிருக்க, சுமார் 15 வருஷகாலமாக ஏதோ சில கும்பாபிஷேக காலங்களில் மாத்திரம் கும்பாபிஷேகம் செய்துவைப்பவர்களின் பயங்கர பலாத்காரத்தினாலோ பணம் கொடுக்கிறேன் என்ற ஆசைவார்த்தைகளினாலோ நடக்கும் கிரமவிரோத வழக்கத்துக்குச் சாஸ்திரப் பிரமாணம் காட்டிப் பொருத்தமாக இருக்கிறது என்னும் வார்த்தையானது ஷை சிவாசாரியர் தவிர மற்றுமுள்ள சிவாசாரியர்களுக்குத் திருப்தியளித்திருக்குமென எண்ணவில்லை.

மேலும், இப்போது இருக்கும் சிவாசாரியர்களும் இதற்கு முந்தி இருந்த சிவாசாரியர்களும் நமது அன்பர் காட்டிய காரண வசனத்தையும் அதன் கருத்தையும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அறியாமல் ஒருவருமில்லை. ஆகையால், இவ்விதமான விஷயங்களை இந்தப் பத்திரிகைக்குக் கொண்டுவராமல் இருக்கும்படி ஷை விருத்தாசலம் விருத்தகிரிசிவாசாரியரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

திருவாசகத்தில் ஓர் மணி

[திருமயிலை சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் எழுதியது.]

மையிலங்குநற் கண்ணிபங்கனே
　　வந்தெனைப்பணி கொண்டபின்மழக்
கையிலங்குபொற் கிண்ணமென்றலா
　　லரியையென்றுனைக் கருதுகின்றிலேன்
மெய்யிலங்குவெண் ணீற்றுமேனியாய்
　　மெய்ம்மையன்பருன் மெய்ம்மைமேவினார்
பொய்யிலங்கெனைப் புகுதவிட்டுநீ
　　போவதோசொலாய் பொருத்தமாவதே.

திருச்சதகத்தில் 62-வது திருப்பாசுரமாகிய மேற்படி திருப்பாட லில் சிவபெருமான் தம்மை (மாணிக்கவாசகரை) ஆட்கொண்டருளிய அருமையை எதிர்மறை உவமான முகத்தால் விதந்து கூறியவாறும்; இத் திருவாசகத்தில் வந்துள்ள உவமையை உரைகாரர் ஒருவரும் நன்கு விளக்கினாரல்லர். "மழக்கையிலங்கு பொற்கிண்ணம்" என்ற தொட ருக்கு "இளங்கையிலுள்ள பொற்கிண்ணம்" என்று பொருள்கூறிச் செல்கின்றனரேயன்றி உள்ளுரையை எவரும் விளக்கிற்றிலர். இளங்கை யென்பது இங்கே இளங்கையையுடைய சிறுகுழந்தையைக் குறித்தவாறும்; "சிறுகை யளாவிய கூழ்" என்னுந் திருக்குறளிற் போல. சிறுகுழந்தையானது தன் கையிற் கொடுக்கப்பட்ட பொற் கிண்ணத்தின் அருமையை எப்படி அறியாத நிலையிலுளதோ அஃதே போல் சுவாமிகள் தம்மை வலிய ஆட்கொண்ட சிவபெருமானது எளிமையை அறியக்கூடவில்லையென்றபடி. இத் திருப்பாசுரத்திற்கு வியாக்கியானம் போல் பரஞ்சோதிமுனிவர் தமது திருவிளையாடற் புராணத்தில் கூறியுள்ள பின்வருஞ் செய்யுளை நோக்குக:—

வறியனொ மொருபிறவிக் குருடன் கையில்
　　வந்தபெரு விலைமணிபோல் மழலை தேருஞ்
சிறியனொ மொருமதலை கையிற் கொண்ட
　　செம்பொன்மணி வள்ளம்போற் றேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை யெளிவந் தாண்ட
　　வருமையறி யேன்றுன்பத் தழுவத் தாழப்
பிறிவறியா வன்பரொடு மகன்றாய் கல்லாப்
　　பேதையேன் குறையிலதெம் பிரானே லென்னே.

திருவாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்—௫௬.
